# சங்க இலக்கியங்களில் துறைமுகங்கள்

**செ.சத்யாசெந்தில்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
சேக்ரட் ஹார்ட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
விழுப்புரம்

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

### முன்னுரை

தமிழகம் மூன்று பக்கங்கள் கடலால் சூழப்பட்ட நாடு. ஆதலால் சங்க கால தமிழர்கள் கடல்வாணிகம் மூலம் அயல்நாட்டு வாணிகத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டிருந்தனர். அவர்கள் இயற்கையாகவே கடல்பயணம் செய்வதிலும், பொருட்களை அயல்நாடுகளுக்கு கப்பல் போக்குவரத்து மூலம் கொண்டு சென்று வணிகம் செய்வதிலும் தொன்றுதொட்டு ஈடுபட்டிருந்தார்கள் என்பதை,

**திரைகடல் ஓடியும் திரவியம் தேடு - (கொன்றை வேந்தன்,39)**

என்ற முதுமொழி கூறுகிறது. கடல் கடந்து பிற நாடுகளுடன் வாணிபம் செய்து பொருள் ஈட்டி வாழ்க்கை தரத்தை உயர்த்திய தமிழர்கள் பிற நாடுகளில் இருந்து சிறந்த பொருள்களைப் பெற்றும், உயர்தரமான பொருட்களை உற்பத்திசெய்து வெளிநாடுகளுக்கு அனுப்பியும் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து வந்துள்ளனர் என்பதை விளக்குவதாக இவ்வாய்வு அமைகின்றது.

### துறைமுகங்கள்

துறைமுகம் என்பது கப்பல்கள் மற்றும் படகுகள் வந்து தங்கி செல்வதற்குரிய இடம் ஆகும். வெளிநாடுகளிலிருந்து வணிகர்கள் கொண்டு வரும் பொருட்களை ஏற்றி இறக்கி அதனை வணிகம் செய்வதற்கு ஏதுவாய் அமைக்கப்பட்ட இடமே துறைமுகம் ஆகும். பழந்தமிழகத்தில் நடைபெற்ற வணிகத்தின் பயனாய் பல துறைமுகங்கள் அக்காலத்தில் சிறப்புடன் விளங்கின.

### முசிறி

சேர நாட்டுக் கடற்கரையில் வஞ்சிமா நகரத்திற்கு மேற்கே கள்ளிப் பேரியாறு கலந்த இடத்தில் அதன் வடகரைமேல் கடற்கரையையொட்டி முசிறித் துறைமுகமும், முசிறிப் பட்டினமும் இருந்தன என்பதனை

**"யவனர்தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளங்கெழி முசிறி" - (அகம்.149,வரி.9-11)**

என்ற வரிகள்மூலம் அறியலாம் முசிறி என்னும் சேரநாட்டுத் துறைமுகப் பட்டினத்தில், யவனர்களின் கப்பல்கள் பொன்னைக் கொடுத்து, அதற்கு விலையாகக் கறியை ஏற்றிக்கொண்டு போனதைப் புலவர் தாயங்கண்ணனார் கூறுகிறார். கறி என்பது சங்ககாலத்தில் மிளகைக் குறிக்கும் சொல்லாகும்.

முசிறிக் கடலில் உற்பத்தியான முத்துக்கள் முசிறிப் பட்டினத்தின் ஒரு பகுதியான பந்தர் என்னும் பகுதியில் (பந்தர் என்னும் அரபுச் சொல்லின் பொருள் அங்காடி அல்லது கடைத்தெரு என்பதாகும்) முத்துக்களும், கொடுமணம் என்னும் பகுதியில் பொன் நகைகளும் விற்கப்பட்டது என்று

கீழ்க்காணும் பதிற்றுப்பத்து பாடல் வரிகள் வெளிப்படுத்துகின்றன.

**"கொடுமணம் பட்ட நெடுமொழி ஒக்கலொடு**
**பந்தர்ப் பெயரிய பேர் இசை மூதூர்**
**கடன் அறி மரபின் கைவல் பாண**
**தெண்கடல் கடல் முத்தமொடு நன்கலம் பெறுகுவை" - (பதிற்றுப்.ஏழாம்பத்து.7, வரி.1-4)**

**காவிரிப்பூம்பட்டினம்**

சோழர்களின் தலைநகராகவும், துறைமுகப்பட்டினமாகவும் இருந்தது காவிரிப்பூம்பட்டினம். இத்துறைமுகம் காவிரி ஆறு வங்கக் கடலுள் கலக்கின்ற புகார் முகத்தின் வடகரையில் அமைந்திருந்தது. இது பூம்புகார் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. கடல்கோள் காரணமாக, இந்நகரம் அழிந்துபோனது.

துறைமுகத்தில் வந்துதங்கிய கப்பல்கள் (நாவாய்கள்-மரக்கலங்கள்) நிற்பது, யானைப்பந்தியில் நிற்கும் யானைகள் அசைந்து கொண்டிருப்பதைப் போன்று இருந்தன என்பதைக் கீழ்கண்ட பட்டினப்பாலை வரிகளால் அறியலாம்.

**"வெளியில் இளக்கும் களிறு போலத்**
**தீம்புகார்த் திரை முன்துறைத்**
**தூங்கு நாவாய் துவன்றிருக்கை**
**மிசைக் கூம்பின் நசைக் கொடியும்" - (பட்டினம்.வரி.172-175)**

**கொற்கை**

பாண்டியர்களின் தலைசிறந்த துறைமுகமாகக் கொற்கை திகழ்ந்தது. தாமிரபரணியின் சங்கமுகத்தில் அமைந்த துறைமுக நகரம் கொற்கை. "மருங்கூர்ப் பட்டினத்திற்கு தெற்கே கொற்கைக் குடாக்கடலும், அதன் மேற்குக்கரையில் கொற்கைத் துறைமுகப்பட்டினமும்" இருந்தன என்பதனை,

**"கொற்கை முள்துறை இலங்கு முத்து உறைக்கும் - (ஐங்குறுநூறு.185)**
**"ஈண்டுநீர் முத்துப்படு பரப்பின் கொற்கை முன்றுறை" - (நற்றிணை.23)**

என்ற ஐங்குறுநூறு, நற்றிணை வரிகள் கொற்கைத் துறைமுகத்தின் சிறப்பினை அழகாக எடுத்துரைக்கின்றன.

கொற்கை முத்தின் சிறப்பினைப் பல்வேறு பாடலடிகள் எடுத்துரைக்கின்றன.

**"மறப்போர்ப் பாண்டியர் அறத்தின் காக்கும்**
**கொற்கை அறம்பெரும் துறை முத்தின் அன்ன" - (அகம்.27, வரி.8-9)**

**"புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை**
**அவிர்கதிர் முத்தமொடு வலம்புரி சொரிந்து" - (அகம்.130, வரி.9-11)**

**தொண்டி**

"சங்க காலத்திலே கிழக்குக் கடற்கரையிலும், மேற்குக் கடற்கரையிலும் இரண்டு தொண்டிப்பட்டினங்கள் இருந்தள்ளன. இரண்டுமே துறைமுகப்பட்டினங்கள்தான் ஒரு தொண்டி சேரநாட்டில் மேற்குக்கரையிலும், மற்றொரு தொண்டி பாண்டிய நாட்டில் கிழக்குக் கடற்கரையிலும் அமைந்திருந்ததாக" மயிலை சீனிவேங்கிடசாமி கூறுகின்றார்.

உப்பினைக் கொடுத்து வெண்நெல்லினை வாங்கிவந்து வெண்சோறு வடித்து உண்டனர் என்றும், அதற்கு ஆயிலை மீன் குழம்பினை வைத்தனர் என்பதை பின்வரும் பாடலடிகள் நன்கு உணர்த்துகின்றன.

**"உப்புநொடை நெல்லின் மூரல் வெண்சோறு**
**ஆயிலை துழந்த அம்புளிச் சொரிந்து**
**கொழுமீன் தடியொடு குறுமகள் கொடுக்கும்**
**திண் தேர்ப் பொறையன் தொண்டி அன்ன" - (அகம்.60, வரி.4-7)**

சேர நாட்டின் தொண்டிப்பட்டினத் துறைமுகத்தின் வளத்தினைப் பின்வரும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

**"குலை இறைஞ்சிய கோட் தாழை**
**அகல் வயல், மலை வேலி**
**நிலவு மணல் வியன் கானல்**
**தெண் கழிமிசைத் தீப் பூவின்**
**தண தொண்டியோர் அடு பொருந" - (புறம்.வரி.9-13)**

**"வெண்கோட்டு யானை விறற்போர்க் குட்டுவன்**
**தெண்திரைப் பரப்பின் தொண்டி" - (அகம்.290, வரி.12-13)**

**"திண்தேர் நள்ளி அண்டர்**
**பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி**
**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு" - (குறுந்.210, வரி.1-3)**

மேலும், ஐங்குறுநூற்றில் சேர அரசர்களின் தொண்டித் துறைமுகம் பத்து பாடல்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐங்.வரி.171-180)

பாண்டியநாட்டின் தொண்டிப்பட்டினத் துறைமுகத்தின் வளத்தினைப் பின்வரும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

**"............................ கொண்டலொடு**
**குருஉத் திரைப்புணரி யுடைதரும் எக்கர்ப்**
**பழந்திமில் கொன்ற புதுவலைப் பரதவர்**
**மோட்டுமணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி**
**மணங்கமழ் பாக்கத்துப் பகுக்கும்**
**வளங்கெழு தொண்டி" - (அகம்.10, வரி. 8-13)**

இதில் **"கொண்டல்"** என்ற சொல்லானது, கிழக்குக் கடலிலிருந்து வீசுகிற காற்றுக்குக் **"கொண்டல் காற்று"** என்றுப் பெயர். இந்தத் தொண்டிக் கிழக்குக் கடற்கரையிலிருந்தது என்பதைக் **"கொண்டல் காற்று வீசுகின்ற தொண்டி"** என்று கூறுவதிலிருந்து அறியலாம்.

சேர நாட்டிலுள்ள தொண்டித் துறைமுகத்திலிருந்து இப்பகுதித் துறைமுகத்தினை வேறுபடுத்திக் காட்டவே அம்மூவனார் **"கொண்டல் காற்று வீசும் தொண்டி"** எனக் குறிப்பிடுகின்றார். இதையே ஆதாரமாகக்கொண்டு மயிலை சீனி வேங்கடசாமி தம்முடைய பழங்காலத் தமிழர் வாணிகம் என்னும் நூலில், ஐம்பெரு காப்பியங்களுள் ஒன்றான சிலப்பதிகாரத்தில் "ஊர்காண் காதை"யில் இளங்கோவடிகள் இத்துறைமுகத்தைக் குறிப்பிடும்பொழுது "கொண்டல்" என்ற சொல்லைப் பயன்படுத்தி இருப்பதைச் சுட்டிக்காட்டி, அம்மூவனார் அகம்.10ஆம் பாடலில் குறிப்பது பாண்டியனின் துறைமுகத்தையே என விளக்குவார்.

கடல்கடந்த நாடுகளிலிருந்து அகிற்கட்டை, சந்தனக்கட்டை, பட்டுத்துணி, சாதிக்காய், இலவங்கம், குங்குமப்பூ, கற்பூரம் முதலான வாசனைப் பொருட்களை ஏற்றி வந்த நாவாய்கள் கொண்டல் காற்றின் உதவியினால் தொண்டித் துறைமுகத்தை வந்தடைந்ததையும், இறக்குமதியான அந்தப் பொருட்களைத் தொண்டியிலிருந்து பாண்டியனின் தலைநகரான மதுரைக்கு அனுப்பப்பட்டதையும் கீழ்கண்ட சிலப்பதிகார பாடல் வரிகள் அழகாக எடுத்துரைக்கின்றன.

**"ஓங்கு இரும் பரப்பின்**
**வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட**
**அகிலும், துகிலும், ஆரமும், வாசமும்,**
**தொகுகருப் பூரமும் சுமந்துடன் வந்த**
**கொண்டலொடு புகுந்து கோமகன் கூடல்**
**வெங்கண் நெடுவேள் வில்விழாக் காணும்**
**பங்குனி முயக்கத்துப் பனி அரசு யாண்டுளன்?" - (சிலம்பு.ஊர்காண்.வரி.106-112)**

**மருங்கூர்ப்பட்டினம்**

மருங்கூர்ப்பட்டினம் "மருங்கை" என்றும் அழைக்கப்ட்டது. பாண்டிய நாட்டுத் (பாண்டிய நாட்டின் கிழக்குக் கரையிலிருந்த) துறைமுகப்பட்டினமாகும். செழுமையான, தலைச் சிறந்த பட்டினமாகும். பசும்பூண் வழுதி என்ற பாண்டிய மன்னனுக்குரியது. இதனை,

**"பசும் பூண் வழுதி மருங்கை" - (நற்றினை.358, பா.வரி.10)**

என்னும் பாடல் வரியின் வழி அறியலாம்.

"செல்வ வளம் பொருந்திய மாட மாளிகைகளை உடையது இப்பட்டினம் என்பதை,

**"திருவுடை வயில் நகர்…………………" - (நற்றினை.258, பா.வரி.4)**

என்ற பாடல் வரி உணர்த்துகின்றது. எப்போதும் மக்கள் கூட்டத்துடன் காணப்படும். பாண்டிய நாட்டு புலவரான நக்கீரர், காயல்களும் (உப்பங்கழிகள்) தோட்டங்களும் உள்ள இத்துறைமுகத்தின் கடைத்தெரு செல்வவளம் கொழித்திருந்தது என்பதைப் பின்வரும் பாடலடிகள் மூலம் அழகுற எடுத்துரைக்கின்றார்.

**"விழுநிதி துஞ்சும் வீறுபெறு திருநகர்**
**இருங்கழிப் படப்பை மருங்கூர்ப் பட்டினத்து**
**எல்லுமிழ் ஆணவம்" - (அகம்.227, வரி.19-21)**

பொழுது இறங்கும்நேரத்தில் அகன்ற கடைத்தெருவில் நிழலிலே குவித்து வைத்திருந்த பச்சை இறாமீனைக் கவர்ந்துண்ணும் காக்கை, கடலில் செல்லாது கடலில் தங்கி நிற்கும் வங்கக்கப்பலின் பாய்மர உச்சியில் சென்று தங்கும் என்று மருங்கூர்ப்பட்டினத் துறைமுகத்தைப் பற்றி நக்கீரர் தமது நற்றிணையில் நயமுடன் உரைத்துள்ளார்.

**"அகல் அங்காடி அசைநிழல் குவித்த**
**பச்சிறாக் கவர்ந்த பசுங்கட் காக்கை**
**தூங்கல் வங்கத்துக் கூம்பில் சேக்கும்**
**மருங்கூர்ப் பட்டினத்து அன்ன" - (நற்.258, வரி.7-10)**

**எயிற்பட்டினம் (சோ பட்டினம்)**

சங்க காலத்தில் தொண்டை நாட்டின் முக்கியத் துறைமுகப் பட்டினமாக இருந்தது எயிற்பட்டினம். இது மதிற்பட்டினம் அல்லது சோ பட்டினம் என்றும் அழைக்கப்பட்டிருக்கலாம். எயில் என்றாலும் சோ என்றாலும் "மதில்" என்பது பொருள். இத்துறைமுகப் பட்டினத்தைச் சூழ்ந்து மதில் இருந்தபடியால் இப்பெயர் பெற்றது. இது பிற்காலத்தில் "மரக்காணம்" என்று பெயர் பெற்றது.

சிறுபாணாற்றுப்படையில் இடைக்காட்டு நாட்டு நல்லூர் நத்தத்தனார் இந்த பட்டினத்தைப் பற்றி பின்வருமாறு குறிப்படப்பட்டுள்ளார்.

**"மணிநீர் வைப்பு மதிலொடு பெயரிய**
**பனி நீர்ப் படுவிற் பட்டினம்" – (சிறுபாண். அடி.152-153)**

எயிற்பட்டினம் ஒய்மானாட்டுத் துறைமுக நகரமாகும். அது நீலமணி போன்ற உப்பங்கழி சூழ்ந்த ஊர்களையுடையது என்பதை கீழ்வரும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

**"காணல் வெண்மணல் கடலுலாய் நிமிர்கரம்**
**பாடல் சான்ற நெய்தல் நெடுவழி**
**மணிநீர் வைப்பு மதிலோடு பெயரிய" - (சிறுபாண்.ஆ.ப, அடி.150-152)**

சிறுபாணாற்றுப்படைக்கு உரைவகுத்த நச்சினார்க்கினியர் அப்பட்டினத்தை "எயிற்பட்டினம்" என்றே குறித்துள்ளார். மேலும் சிறுபாணாற்றுப்படையில் இறுதி வெண்பாவில் நல்லியக்கோடன் எயிற்பட்டினநாடன் என்றும், அப்போதைய மிகப்பழமையான ஊரான "கிடங்கில்" என்பதை (தற்போது திண்டிவனம்) தலைநகராகக் கொண்டவன் என்றும் குறிக்கப்பட்டுள்ளார்.

எயிற்பட்டினத்தின் கலங்கரை விளக்கைப் பற்றி பெரும்பாணாற்றுப்படை பின்வருமாறு விவரிக்கின்றது.

**"வானம் ஊன்றிய மதலை போல**
**ஏணி சாத்தியை வேற்றருஞ் சென்னி**

**விண்பொர நிவந்த வேயா மாடத்து**
**இரவின் மாட்டிய இலங்குசுடர் ஞெகிழி**
**உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும் துறை" - (பெரும்பாண்.அடி.346-350)**

கலங்கரைவிளக்கு நிலையம் உயரமான கட்டடமாக இருந்தது. அது சாந்து பூசப்பட்டு தள வரிசையுள்ளதாக இருந்தது. அதன் உச்சியில் இரவு நேரங்களில் தீயிட்டு எரித்தார்கள். உச்சியில் ஏறி விளக்கு ஏற்றுவதற்கு ஏணிப்படிகள் இருந்தன என்று கலங்கரை விளக்கின் அமைப்பினைக் கூறுகின்றது.

**மாந்தை**

சேரநாட்டுத் துறைமுறைகப்பட்டனமாக அறியப்படுகின்ற மாந்தை **"துறைகெழு மாந்தை", "கடல்செழு மாந்தை"** என்று கூறப்படுகின்றது. **"மாந்தை மரந்தை"** என்றும் கூறப்பட்டது. மாந்தைப் பட்டினத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் பொன், வைரம் விலையுயர்ந்த மணிகள் முதலான பெருஞ்செல்வத்தை ஆம்பல் கணக்கில் (ஆம்பல் என்பது கணிதத்தில் பெருந்தொகையைக் குறிக்கும் சொல்லாகும்) புதைத்து வைத்திருந்தான் என்றும், மாற்றாரிடம் திறையை வாங்கியதாகவும் மாமூலனர் கூறுகிறார்.

**"வலம்படு முரசிற் சேரலாதன்**
**முந்நீரோட்டிக் கடம்பறுத் திமயத்து**
**முன்னோர் மருள வணங்குவிற் பொறித்து**
**நன்னகர் மாந்தை முற்றத்து ஒன்னார்**
**பணிதிறை தந்த பாடுசால் நன்கலம்**
**பொன் செய்பாவை வயிரமொடு ஆம்பல்**
**ஒன்றுவாய் நிறையக் குவைஇ அன்றவண்**
**நிலந்தினத் துறந்த நிதியம்" - (அகம்.127, வரி.3-10)**

இந்த பெருஞ்சேரலாதன் கடற்கொள்ளைக்காரக் குறும்பரையை அடக்கியவன். இத்துறைமுகத்தைப் பற்றிய வேறு குறிப்புக்கள் ஏதும்இல்லை.

**நறவு**

துளுநாட்டின் தெற்குப் பகுதியில் அமைந்திருந்த ஒரு துறைமுகப்பட்டினம் நறவு ஆகும். துளு நாட்டு மன்னன் ஆட்சியின் கீழ் இருந்தது. நறவு என்னும் சொல்லுக்கு கள், மது என்னும் பொருளும் உண்டு. ஆகையால் நறவு என்ற பெயர் உள்ள இத்துறைமுகப் பட்டினத்தை தமிழ் புலவர் "துவ்வா நறவு" (உண்ணப்படாத நறவு) என்று கூறியுள்ளார். சேர நாட்டு மன்னர் துளுநாட்டு நன்னனை வென்று ஆட்சியைக் கைப்பற்றியபோது, பாட்டுச் சேரலாதன் இத்துறைமுகப் பட்டினத்தில் இருந்தான் என்பதை பதிற்றுப்பத்து கூறுகின்றது. யவன நாட்டுக் கப்பல் வணிகர்கள் இங்கு வந்து வணிகம் செய்தார்கள். அவர்கள் நறவை என்பதை "நவ்ரா" என்று அழைத்தார்கள்.

**"அம்சேறு அமைந்த முண்டை விளை பழம்**
**ஆறு செல்மாக்கட்கு ஓய் தகை தடுக்கும்**
**மறாஅ விளையுள் அறாஅ யாணர்**
**தொடை மடிகளைந்த சிலையுடை மறவர்**
**பொங்கு பிசிர்ப் புணரி மங்கலொடு மயங்கி**
**வரும் கடல் ஊதையின் பனிக்கும்**
**துவிவா நறவின் சாய் இனத்தானே" -** (பதிற்றுப்.6ஆம்.பத்து.10ஆம், வரி.6-12)

**வீரை** (வீராம்பட்டினம்)

"சங்க இலக்கியங்களில் வீரை" எனக் குறிக்கப்பெறும் ஊரானது தற்போது புதுச்சேரிக்குத் தெற்கே அமைந்துள்ள கடற்கரை ஊரான வீராம்பட்டினமாகும். அரிக்கமேடு என்ற அகழ்வாய்விடம் இவ்வூரை அடுத்து அமைந்துந்துள்ளது.

இவ்வூர் சங்க இலக்கியங்களில் வீரை எனக் குறிக்கப்படுகின்றது. வீரை என்ற சொல்லுக்கு "கடல்" என்ற பொருள் உண்டு. புறநானூற்றின் 320ஆம் பாடலைப் பாடியுள்ள வீரை வெளியனார் இவ்வூரைச் சார்ந்தவர் ஆவார்.

மேலும், அகநானூறு இவ்வூரைக் குறித்துப் பின்வரும் பாடலில் குறிப்பிடுகிறது.

**"அடுபோர் வேளிர் வீரை முன்றுறை**
**நெடுவேள் உப்பின் நிரம்பாக் குப்பை**
**பெரும்பெயற்கு உருகியா அங்கு" - (அகம். பாடல்.வரி.206)**

சங்க இலக்கியங்களில் மேலும் பல துறைமுகங்கள் பற்றிய செய்திகள் பாடல்வரிகள் மூலம் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. அவை தற்போது பரவலாக பலராலும் அறியப்படாமலே உள்ளன.

**நிறைவுரை**

சங்க இலக்கியங்கள் தமிழர்களின் கடல்வழிப் பயணத்தைப் பற்றியும், அதன் மூலம் அவர்கள் எவ்வாறு வாணிகம் செய்தனர் என்பதைப் பதிவாக்கியுள்ளன. சங்க இலக்கியங்கள் கடல்வழிப் பயணம் மேற்கொள்பவர் தோணி, தெப்பம், நாவாய், படகு, பரிசில் போன்ற பலவகைப் கப்பல்களைப் பயன்படுத்தி பிறநாடுகளுடன் கடல் வாணிகம் செய்துள்ளனர் எனவும், சங்ககாலத்துத் தமிழர்கள் தங்களுடைய நாடுகளில் வணிகர்களுக்கு ஊக்கமளித்து கடல் வாணிகத்தை வளர்த்தார்கள் என்பதையும், தங்கள் நாடுகளில் வாணிகக் கப்பல்கள் வந்து போகவும், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி செய்யவும் துறைமுகப் பட்டினங்களை அமைத்திருந்தனர் எனவும், இரவு நேரங்களில் கடலில் வருகின்ற கப்பல்கள், திசை தவறி போகாமல் இருக்கவும், துறைமுகப் பகுதியை அடையாளம் கண்டு கொள்ளவும் கலங்கரை விளக்குகளை அமைத்தார்கள் எனவும், துறைமுகங்களில் உள்ள வாணிகப் பொருட்கள் களவு போகாதபடி காவல் வைத்தனர் எனவும், குறிப்பிட்டுள்ளன.